# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை
***********************

## இந்திய கடற்படையின் டோனியர் விமானம் இலங்கை விமானப் படையில் இணைப்பு

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினம் மற்றும் வலுவடையும் இந்திய இலங்கை உறவுகள் ஆகியவற்றைக் குறிக்கும் முகமாக இந்தியக் கடற்படைக்கு சொந்தமான டோனியர் விமானம் ஒன்று இலங்கை விமானப் படையினருக்கு நேற்றைய தினம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்களால் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகருமான திரு சாகல ரத்நாயக்கா அவர்களிடம் கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை விமானப் படையின் முகாமில் நடைபெற்ற சம்பிரதாய பூர்வமான நிகழ்வொன்றில் இந்த விமானம் கையளிக்கப்பட்டுள்ளது. இலங்கை விமானப்படையின் சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் உட்பட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவியின் கீழ் இலங்கை விமானப் படையில் இணைக்கப்படும் இரண்டாவது இந்திய தயாரிப்பு டோனியர் இதுவாகும். 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி, சரியாக ஒரு வருட காலத்திற்கு முன்னர் அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்களிடம் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கப்பட்ட இந்திய கடற்படைக்கு சொந்தமான முதலாவது டோனியர் விமானம் ஒரு வருட நிறைவில் பராமரிப்பு வேலைக்காக இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கும் நிலையில் அதற்கு மாற்றீடாக இந்த டோனியர் விமானம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. இந்திய கடற்படையின் அதிநவீன டோனியர் கடல்சார் கண்காணிப்பு விமானத்தை சேவையில் இணைப்பதன் மூலம் இலங்கையின் கண்காணிப்பு திறன் துரிதமாக அதிகரிக்கும் அதேவேளை இலங்கை விமானப்படையின் பலம் மேலும் வலுவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள், பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும்

வளர்ச்சி (SAGAR) என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் பிரதிபலிப்பாக, இலங்கை பாதுகாப்புப் படைகளின் திறன் மேம்பாடு மற்றும் ஸ்திரமான வளர்ச்சி ஆகியவற்றில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக சுட்டிக்காட்டினார். மேலும், எதிர்காலத்தில் இந்திய உதவியுடன் இலங்கைக்கு மேலதிக டோனியர் விமானங்கள் வழங்கப்படுவதன் மூலம் இந்த ஈடுபாடு மேலும் உறுதிப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3. இரு நாடுகளுக்கும் இடையிலான வளரும் ஒத்துழைப்பு மற்றும் நட்புறவின் பிரதிபலிப்பாகவே இந்திய கண்காணிப்பு விமானம் இலங்கையை வந்தடைந்துள்ளமை அமைந்துள்ளது. கடந்த வருடம் சேவையில் இணைக்கப்பட்ட இந்திய கடற்படையின் டோனியர் விமானம் சமுத்திர கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் SAR இலக்குகளை வெற்றிகொள்வதிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளதாக உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள் மேலும் தெரிவித்திருந்தார். இந்த விமானத்தின் செயல்திறன் மிகவும் வலுவானதாக காணப்படும் அதேவேளை இரு நாடுகளினதும் படையினருக்கு இடையே SOPகளை நெறிப்படுத்தவும் வாய்ப்புகளை வழங்கியது. இந்த விமானத்தின் செயற்பாடுகள் மூலம் நமது கடற்பரப்பைப் பாதுகாப்பது, நமது இரு நாட்டு மக்களின் முன்னேற்றம் மற்றும் செழுமைக்கான அமைதியான சூழலை உருவாக்க உதவும் என்றும், இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம்' கொள்கையின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கப்படும் முன்னுரிமையின் அடையாளமாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

4. போதைப்பொருள் மற்றும் ஆட் கடத்தல்கள், ஏனைய கடத்தல் நடவடிக்கைகள், தேடுதல் மீட்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் பிராந்தியத்தில் காணப்படும் சவால்களை முறியடித்து பிராந்தியத்தில் காணப்படும் பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கான வல்லமையினை இவ்விமானத்தில் காணப்படும் அதி நவீன கருவிகள் மூலம் இலங்கை விமானப் படையினர் பெற்றுக்கொள்கின்றனர். கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் முக்கிய விடயமாக கடல்சார் பாதுகாப்பு அடையாளங்காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், இந்த விமானத்தை இலங்கை விமானப் படையின் சேவையில் இணைத்தமையானது கடல்சார் அச்சுறுத்தலில் இருந்து இலங்கையின் தனித்துவமான பொருளாதார வலயத்தினை விடுவிக்கும்

செயற்பாடுகளில் சாதகமான பங்களிப்பை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

*************************

கொழும்பு
17 ஆகஸ்ட் 2023